THE HINDU

Dated: 13.03.2025

# Welcome gesture

## The ECI's changed approach to engaging with critics is a good move

The initiative by the newly appointed commissioners of the Election Commission of India (ECI) to invite political party representatives and leaders for an interaction to "strengthen electoral processes" is a welcome move. The move was precipitated by the rising complaints and grievances raised by the Opposition relating to voter registration and turnout, and other matters concerning the conduct of elections. The ECI has also asked parties to submit suggestions on issues concerned besides instructing provincial officials to interact with party representatives on a regular basis. In the recent past, the ECI had taken an unusually aggressive posture in responding to the Opposition's complaints, which included being dismissive of genuine grievances such as undue delays in publishing voter turnout figures and even going on to admonish its critics. Such gestures only deepened distrust among political parties. While the Opposition has sown so much doubt on issues such as the functioning of the Electronic Voting Machine, resulting in an atmosphere of scepticism seeping into the minds of a majority of voters, the ECI could also have done more to reassure voters about the robustness of the electoral process related to electronic voting. Other legitimate issues, which include regulation of campaigns, action against hate speech, and the timing of elections at various levels also need a thoroughgoing review, and the ECI must be receptive to the critique of its functioning on these issues. There is also the question of the constitution of the ECI and the appointment of the Chief Election Commissioner, but that is a matter now in the hands of the Supreme Court.

One of Indian democracy's most salient features since Independence has been the ECI's evolution and its autonomous role in the conduct of periodic elections, leading to increased voter participation and more faith in electoral democracy. This conduct, as the processes evolved, has emphasised transparency, accountability, and the clear and robust release of relevant and verifiable information related to elections. While the Electors Photo Identification Card issue related to duplicate numbers for voters across States is largely trivial – as the ECI has averred – the more serious issues related to voters being registered in different polling locations require to be rectified. The ECI must also ensure a level playing field during campaigns so that there is no undue advantage for the ruling party – a grievance widely expressed by Opposition forces across States. Regular interactions with political party representatives and a clear release of verifiable information will go a long way in allaying fears about the tried and tested electoral process in the country.

THE HINDU - ENGLISH

Dated: 13.03.2025

# LETTERS TO THE EDITOR

**Reaching out**

The Election Commission of India's move to invite parties for talks to strengthen the election process is one that must be seen with scepticism (March 12). One wonders why it has had a change in attitude considering its stand in the past towards any criticism or even genuine suggestions.

But now that it has tried to change, it must consider these steps. Much before the general election, say six months ahead, the President, through the Cabinet Secretary at the Centre, and the Governor through the Chief Secretary in States, should publish a report on the 'Status of the Nation' or '... the State' as the case may be, which will explain in simple terms, what the state of finances, education, agriculture, industrial development, foreign relations and defence are. This will let the nation know where exactly we stand. This should be done automatically without the involvement of the ruling/Opposition parties. Every political party should publish its manifesto, outlining expected time-bound end-results. These are issues that should be open to challenge in a court of law.

**T.S. Rao,**
Ghaziabad, Uttar Pradesh

Although conducting elections in the world's largest democracy is no child's play, and the Election Commission of India has been straining every sinew to ensure that every aspect involved in the poll process is taken care of, there have been occasions when fingers have been pointed at the Commission for exhibiting bias in favour of the ruling party. The invitation to all political parties is a golden opportunity for the Opposition to air views freely and discuss issues threadbare. The ECI should also have an open and receptive mind and listen to the grievances of the Opposition. It is time the ECI endeavours to dispel the notion that it is often seen as a handmaiden of the powers that be.

**C.V. Aravind,**
Chennai

DECCAN CHRONICLE
Dated: 13.03.2025

# EC needs to clean up its act

The decision of the Election Commission of India to call leaders of the political parties for an interaction to "further strengthen the electoral process" and invite suggestions regarding any "unresolved issues" is a welcome move. The political parties must make use of the opportunity and ensure that their grievances and complaints on the shortfalls are presented in a comprehensive manner and forward suggestions that can make the election exercise fool-proof.

The electoral process in India has undergone tremendous changes in the last three decades. The first change was witnessed when the Election Commission of India stopped acting as just another department of the government and instead chose to act in an independent way. Better formulae, including the introduction of the voter photo identity card, almost ended widespread rigging which was a curse at one point in time. A tectonic shift in the process came with the rolling out of the electronic voting machines across the nation which cut down on both the time and spending in one go.

There have been several complaints against the EVMs, the underlying one being the possibility of mass manipulation of the machines thereby undermining the entire poll process, but no charge has survived scrutiny yet. The EC has fought both legal and technical challenges quite convincingly. Political parties who have lingering doubts about the machines must take this opportunity to seek further clarifications.

The latest in the series of allegations, though, is duplicate electoral photo identity cards and possible manipulation of the electoral rolls. Prima facie, the EC has found some meat in the allegations and has ordered action to ensure that there is no more duplication of the cards. But it ought to address this issue in a comprehensive manner.

While the technical problems are identifiable and amenable to correction, the independence of the EC as a constitutional institution has been a big question of late. Doubts have been raised about it returning to its old status as an adjunct of the government. It is for the EC, and EC alone, to settle those.

A productive interaction among the key players of the world's largest democratic process should culminate in further streamlining it; and the country is looking forward to such a conversation.

TIMES OF INDIA Dated: 13.03.2025

# Constitutional experts raise concerns about ONOE bill

Akhilesh.Singh
@timesofindia.com

**New Delhi:** As constitutional experts, including former CJI and the Rajya Sabha member Ranjan Gogoi, have raised concerns about certain provisions in the bill on simultaneous elections, the parliamentary panel reviewing the legislation is considering broader consultations to explore changes to the draft.

Panel head and BJP MP from Pali, P P Choudhary, told **TOI** on Thursday that the committee is open to amending the original draft and that seeking opinion from diverse sections reflected a commitment to transparency and incorporating valuable suggestions.

"The govt has referred the bill to the parliamentary panel to see that opinions are sought and desired changes are made. There might be scope for corrections and improvisation, which can happen through consultations only. We are seeking opinion from experts only to see that desired changes are made. After seeking opinion, the panel will review and explore making changes," Choudhary said.

## 'PLANNING TO SEEK PUBLIC OPINION'

Asked about the decision to seek public opinion, Choudhary said ordinary citizens were the most vital stakeholders and their perspective was essential. "We are going to launch a campaign seeking public opinion to ensure transparency and also that everyone is heard and consulted. This is one of the most significant legislative changes in the history of the country and common people," he said.

The Joint Parliamentary Committee on 'one nation, one election' invited Justice Gogoi and former Chief Justice of Delhi High Court Rajendra Menon on Tuesday, and both delivered detailed presentations. The panel has planned further discussions with legal luminary Harish Salve and attorney general R Venkataramani. The next meeting is scheduled for March 17.

THE HINDU - TAMIL
Dated: 13.03.2025

# 18-ல் கட்சிகளுடன் தேர்தல் அதிகாரி ஆலோசனை

**சென்னை**

தமிழகத்தில் தேர்தல் தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வு காண வரும் மார்ச் 18-ம் தேதி தலைமை செயலகத்தில் அனைத்துக் கட்சி ஆலோசனைக் கூட்டம் நடத்த தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் உத்தேசித்து இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

தமிழகத்தில் 6 கோடியே 36 லட்சம் வாக்காளர்கள் உள்ளனர். அடுத்த ஆண்டு தமிழக சட்டப் பேரவை தேர்தல் நடைபெற உள்ளது. இந்திய தேர்தல் ஆணைய தலைமை தேர்தல் ஆணையராக பொறுப்பேற்றுள்ள ஞானேஷ் குமார், அனைத்து மாநில தலைமை தேர்தல் அதிகாரிகள், மாவட்டதேர்தல் அதிகாரிகள், வாக்காளர் பதிவு அலுவலர்கள் ஆகியோர் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகளுடன் தொடர்ந்து ஆலோசனை கூட்டம் நடத்தி, ஆலோசனைகளைப் பெற்று, சட்ட விதிகளுக்கு உட்பட்டு தீர்வுகாண வேண்டும். அது தொடர்பான விவரங்களை மார்ச் 31-ம் தேதிக்குள் தேர்தல் ஆணையத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளார்.

இந்நிலையில், தமிழகத்தில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகளுடன் மாநில தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் வரும் 18-ம் தேதி ஆலோசனை நடத்த உத்தேசித்து இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

இக்கூட்டத்தில் திமுக, அதிமுக, பாஜக, காங்கிரஸ் உள்ளிட்ட 14 கட்சிகளின் பிரதிநிதிகள் பங்கேற்க உள்ளனர். இதில் முதன் முறையாக நாம் தமிழர் கட்சி, விடுதலை சிறுத்தைகள் கட்சி பிரதிநிதிகளும் பங்கேற்க இருப்பது குறிப்பிடத்தக்கது.

இக்கூட்டத்தில் ஒரே நபர் ஒன்றுக்கு மேற்பட்ட வாக்காளர் பட்டியலில் இடம்பெற்றிருப்பது, இறந்தவர்கள் பெயர்களை நீக்காமல் இருப்பது உள்ளிட்ட வாக்காளர் பட்டியலில் உள்ள குளறுபடிகள், வாக்குச்சாவடிகள் அமைவிடம் தொடர்பான ஆட்சேபனைகள், தேர்தல் நடத்தை விதிகளை முறையாக அமல்படுத்துவது உள்ளிட்டவை குறித்து விவாதிக்க இருப்பதாக கூறப்படுகிறது.

DAILY THANTHI
Dated: 13.03.2025

சென்னையில்

# அனைத்து கட்சி கூட்டம் 18-ந் தேதி நடத்தப்படுமா?

## தலைமை தேர்தல் அதிகாரி தகவல்

சென்னை, மார்ச்.13-
இந்தியாவில் தேர்தல் செயல்முறைகளை மேலும் வலுப்படுத்துவதற்காக அரசியல் கட்சித் தலைவர்கள் மற்றும் கட்சியின் மூத்த உறுப்பினர்களுடன் அவ்வப்போது கலந்துரையாடலை நடத்த தேர்தல் கமிஷன் திட்டமிட்டு உள்ளது. இந்திய தேர்தல் கமிஷன் கடந்த வாரம் நடத்திய கூட்டத்தில், அனைத்து அரசியல் கட்சிகளுடன் தலைமைத் தேர்தல் அதிகாரிகள், மாவட்ட தேர்தல் அதிகாரிகள், வாக்காளர் பதிவு அதிகாரிகள் அவ்வப்போது கலந்துரையாடல் கூட்டங்களை நடத்த வேண்டும் என்றும் அவர்கள் வைக்கும் கோரிக்கைகளை சட்டத்திற்கு உட்பட்டு தீர்த்து வைக்க வேண்டும் என்றும் தலைமை தேர்தல் கமிஷனர் ஞானேஷ் குமார் உத்தரவிட்டார். இதுதொடர்பாக அரசியல் கட்சிகளுக்கும் தேர்தல் கமிஷன் கடிதம் எழுதியுள்ளது.

இதற்கிடையே தமிழகத்தில் அரசியல் கட்சிகளை அழைத்து பேச தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் திட்டமிட்டுள்ளார். தற்போது அங்கீகாரம் பெற்றுள்ள விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, நாம் தமிழர் கட்சி உள்பட 14 தேசிய மற்றும் மாநில கட்சிகளை இந்த கூட்டத்திற்கு அவர் அழைக்கவுள்ளார். இந்த அனைத்து கட்சி கூட்டத்தை வரும் 18-ந் தேதி பிற்பகலில் தலைமைச் செயலகத்தில் நடத்தலாமா? என்ற ஆலோசனை நடத்தப்பட்டு வருகிறது.

இதுபற்றி பேசிய அர்ச்சனா பட்நாயக், 18-ந் தேதியை உத்தேசமாகத்தான் கருதியுள்ளோம் என்றும் அனைத்து கட்சி கூட்டம் நடத்தப்படும் தேதி பின்னர் உறுதி செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

DINAKARAN

Dated: 13.03.2025

### தேர்தல் நடைமுறைகளை வலுவாக்கும் யோசனைகளை தெரிவிக்க

# 18ம் தேதி அனைத்துக்கட்சி கூட்டம்

## தமிழக தலைமை தேர்தல் அதிகாரி தகவல்

சென்னை, மார்ச் 13: தேர்தல் நடைமுறைகளை வலுப்படுத்த யோசனைகளை தெரிவிக்கும் வகையில் 18ம் தேதி அனைத்துக்கட்சி கூட்டம் நடைபெறலாம் என்று தமிழக தலைமை தேர்தல் அதிகாரி கூறியுள்ளார்.

மாநில தலைமை தேர்தல் அதிகாரி, மாவட்ட தேர்தல் அதிகாரி, வாக்காளர் பதிவு அதிகாரி மட்டத்தில் தீர்க்கப்படாத பிரச்சினைகள் எதுவும் இருந்தால், அதுபற்றி வரும் ஏப்ரல் 30ம் தேதிக்குள் கருத்துகளை அளிக்கும்படி அனைத்து தேசிய மற்றும் மாநில அரசியல் கட்சிகளை இந்திய தேர்தல் கமிஷன் கேட்டுக் கொண்டுள்ளது. இதுதொடர்பாக அரசியல் கட்சிகளுக்கு தேர்தல் கமிஷன் கடிதமும் எழுதியுள்ளது. தேர்தல் செயல்முறைகளை மேலும் வலுப்படுத்துவதற்காக கட்சி தலைவர்கள் மற்றும் கட்சியின் மூத்த உறுப்பினர்களுடன், சாதகமான நேரத்தில் கலந்துரையாடலை நடத்தவும் தேர்தல் கமிஷன் திட்டமிட்டுள்ளது.

இந்திய தேர்தல் கமிஷன் கடந்த வாரம் டெல்லியில் நடத்திய கூட்டத்தில், அனைத்து அரசியல் கட்சிகளுடன் மாநில தலைமை தேர்தல் அதிகாரி, மாவட்ட தேர்தல் அதிகாரி, வாக்காளர் பதிவு அதிகாரி அவ்வப்போது கலந்துரையாடல் கூட்டங்களை நடத்த வேண்டும் என்று என்றும் தலைமை தேர்தல் கமிஷனர் ஞானேஷ் குமார் உத்தரவிட்டார். அது பற்றிய அறிக்கையை சமர்க்கும்படியும் அவர் கேட்டுக் கொண்டார். இந்த நடைமுறையை அரசியல் கட்சிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.



அதோடு, மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம், வாக்காளர் பதிவு விதிகள், தேர்தல் நடத்தை விதிகள், உச்ச நீதிமன்ற உத்தரவுகள், இந்திய தேர்தல் கமிஷனால் அவ்வப்போது வெளியிடப்படும் கையேடுகள் போன்றவை சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல்களை நடத்துவதற்கான வெளிப்படையான சட்ட ரீதியான கட்டமைப்பை நிறுவியுள்ளன என்றும் அரசியல் கட்சிகளுக்கு எழுதிய கடிதத்தில் தேர்தல் கமிஷன் குறிப்பிட்டுள்ளது.

இந்நிலையில், தேர்தல் நடைமுறைகளை வலுப்படுத்த யோசனைகளை தெரிவிப்பது தொடர்பாக விரைவில் அனைத்துக்கட்சி கூட்டத்திற்கு தமிழ்நாடு தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் அழைப்பு விடுத்துள்ளார். இந்த கூட்டத்தில் கலந்துகொள்ள அங்கீகரிக்கப்பட்ட தேசிய கட்சிகளான காங்கிரஸ், சிபிஎம், பாஜக, பகுஜன் சமாஜ் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட மாநில கட்சிகளான திமுக, அதிமுக உள்ளிட்ட 12 கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து தமிழக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் கூறும்போது, "அனைத்துக்கட்சி கூட்டம் குறித்து நிறைய கேள்விகள் உள்ளன. 18ம் தேதி தற்காலிகமாக இறுதி செய்யப்பட்டுள்ளது. ஆனாலும் அந்த தேதி உறுதிப்படுத்தப்பட்டவுடன் முழுமையாக தெரிவிக்கப்படும்" என்றார்.

DINAMANI

Dated: 13.03.2025

# அங்கீகரிக்கப்பட்ட 12 கட்சிகளுடன் தேர்தல் அதிகாரி மார்ச் 18-இல் ஆலோசனை

**சென்னை, மார்ச் 12:** தேர்தல் நடைமுறைகளை வலுப்படுத்த தமிழகத்திலுள்ள அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுடன் தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் ஆலோசனை நடத்தவுள்ளார்.

தலைமைச் செயலகத்தில் உள்ள பழைய கூட்டரங்கில் மார்ச் 18-ஆம் தேதி மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ள கூட்டத்தில் பங்கேற்குமாறு கட்சிகளுக்கு தமிழக தேர்தல் துறை சார்பில் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. தேர்தல் நடைமுறைகளை வலுப்படுத்தவும், தேர்தலில் முக்கியப் பங்காளராக விளங்கும் அரசியல் கட்சிகளின் குறைகளைக் கேட்டறியவும் அனைத்து மாநில தலைமைத் தேர்தல் அதிகாரிகளை இந்திய தலைமைத் தேர்தல் ஆணையம் கோரியிருந்தது. அதன்படி,

தமிழகத்தில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் கூட்டத்தை நடத்தி அதன்வழியே கருத்துகளைப் பெற தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் முடிவு செய்துள்ளார். இதற்காக இந்த ஆலோசனைக் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**யாருக்கெல்லாம் அழைப்பு?:** தமிழகத்தில் தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட கட்சிகள் 12 உள்ளன. மாநிலக் கட்சிகளைப் பொறுத்தவரையில், திமுக, அதிமுக, தேமுதிக, இந்திய கம்யூனிஸ்ட் ஆகிய நான்கு கட்சிகளும், தேசிய அளவில் காங்கிரஸ், பாஜக, மார்க்சிஸ்ட், ஆம் ஆத்மி, பகுஜன் சமாஜ், தேசிய மக்கள் கட்சி ஆகிய ஆறு கட்சிகளும் தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிப்பட்டுள்ளன. இப்போது விடுதலைச் சிறுத்தைகள், நாம் தமிழர் ஆகிய இரண்டு கட்சிகளும் அந்தப் பட்டியலில் இணைந்துள்ளன.

மார்ச் 18-இல் நடைபெறவுள்ள கூட்டத்தில் பங்கேற்க அந்தக் கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக தேர்தல் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.